RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22486

# கார்த்திகை தீப வழிபாடு

பெ. கிருஷ்ணமூர்த்தி [அ, *], மா. வெங்கடேசன் [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி (ஆடவர்), கிருஷ்ணகிரி-63500, தமிழ்நாடு, இந்தியா

# Karthikai Deepam Worship

P. Krishnamurthy [a, *], M. Venkatesan [a]

[a] Department of Tamil, Government Arts College (Mens) Krishnagiri- 635001, Tamil Nadu, India

* Corresponding Author: krishnamurthyp@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Palandamizhar never celebrated Karthikai Deepam. There was a custom of killing Chokkapan to celebrate. In those days, if the ippasi means Vidatu, it will be raining and if the bagal flower blooms it will be morning and if the mandarin blossoms it will be identified as dusk. During this rainy season, the insects lay their eggs under the leaves of the crop plant and the flying insects start again in Karthikai. It is a natural way to protect crops from pests. The full moon of Chitrai Poornami, Vaikasi, Visagam, Masimagam and the list goes on and the Kartikai Poornami is the culmination of all these. Deepam is made up of earth, water, air, fire and sky, which is celebrated for a long time. "Ajalada ankai sivanda or aalal kalal sivandavaaro" by Tiruvakukaraikal Ammaiyar Yumushtha Thiruvanthadi, did Shiva's face turn red due to crying and dancing, or did Shiva's color turn red because he was holding and dancing? He wonders.

**Keywords:** Kartika interpretation, Thiruvannamalai Kartika interpretation, Fasting method

## முன்னுரை

இல்லங்களை விளக்குகளால் அலங்கரித்து ஒளி வெள்ளத்தில் இல்லங்களை மிதக்கவைத்து வழிபடுவர் .தீப்பொறிசிதறும் மாவலி எனும் வான வேடிக்கையும் இன் நாளில் செய்து அதை சுழற்றி கொண்டாடுவர். கார்த்திகை விழாவைக் குமராலாய தீபம், சர்வாலயதீபம் விஷ்ணுவாலய தீபம் என மூன்றாக ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடுவர்.

## கார்த்திகை விளக்கீடு

கார்த்திகைத் தீபம், என்பது கார்த்திகைத் திங்கள் முழு நிலவு நாளும் கார்த்திகை நாண் மீனும் சேர்ந்த திருகார்த்திகை நாளில் தமிழர் தமது இல்லங்களிலும் கோவில்களிலும் பிரகசாமான விளக்குகளை ஏற்றி மகிழ்ச்சியாகக் கொண்டாடும் ஒருவிளக்கீட்டுத் திருநாள் ஆகும்.

## திருவண்ணாமலை கார்த்திகை விளக்கீடு

காலையில் பரணிதீபம் ஏற்றியவுடன் மாலை மலையில் இத்தீபம் ஏற்றப்படும். இத்தீபம் சிவன் அக்னிபிழம்பாக, நெருப்புமலையாக நின்றார் என்ற ஐதிகப்படி மலையில் தீபம் ஏற்றப்படுகிறது. இத்தீபம் ஏற்றும் மலையானது 2668 அடிஉயரம் கொண்டது. இம்மலை மீது தீபம் ஏற்ற செம்பு, இரும்பு கொப்பரை கொண்டு தயாரிக்கப்பட்ட கொப்பரையில் தீபம் ஏற்றுவர்.

இக்கொப்பரையை 1668ல் பிரதானி வேங்கடபதி ஐயர் என்பவர் வெண்கல கொப்பரை செய்து கொடுத்தார். பின்பு 1991-ல் இரும்பினால் உருவாக்கப்பட்ட கொப்பரை தற்போது உள்ளது .இது பக்கதர்களின் உபயம் ஆகும். இக்கொப்பரையை மலைமீது வைக்கும் இத்தீபம் ஏற்றச் சுமார் 3000 கிலோ மேற்பட்ட நெய்யும் 1000 மீட்டர் காட துணியும் கொண்டு ஏற்றப்படுகிறது.

## விரதம் இருக்கும் முறை

இதன் முதல் நாளான பரணி நட்சத்திர நாளில் சைவசமயிகள் பகலில் மட்டும் ஒருபொழுது உண்டு கார்த்திகையன்று அதிகாலையில் நீராடி இறைவனை வழிபட்டுநீர் மட்டும் அருந்தி இரவு கோயிலுக்குச்; சென்று தரிசனம் பெறுவர் .மறுநாட் காலையில் காலைக் கடன்களை முடித்து நீராடி பாரணை அருந்தி விரதத்தை நிறைவு செய்வர். பன்னிரண்டு ஆண்டுகள் இவ்விரதம் இருப்பவர்கள் வேண்டும் வரங்களைப் பெறலாம் என்பது ஐதீகம்.

## கார்த்திகை நட்சத்திரம்

கார்த்திகை நட்சத்திரத்தன்று பூரணை கூடுகின்ற மாதம் கார்த்திகை ஆகும். இதனால் இக்கார்த்திகை நாள் திருகார்த்திகை எனப்படுகிறது. கார்த்திகை நட்சத்திரம் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களைக் கொண்டிருந்த போதிலும் அதிலுள்ள ஏழு நட்சத்திரங்கள் பிரகாசமான ஆறு நட்சத்திரங்களே கார்த்திகை நட்சத்திரக் கூட்டம் எனப்படுகிறது.

## சூடாமணி நிகண்டு

கார்த்திகை மாதத்தைக் குறிக்கும் சொற்கள்

தெறுகால்

தேள்

விருச்சிகம்

கார்த்திகைநாளைக் குறிக்கும் சொற்கள்

அங்கி

அளக்கர்

அளகு

அறுவாய்

ஆரல்s

இறால்

ஏரிநாள்

நாவிதன்

## இலக்கியங்களில் கார்த்திகை தீபம் பற்றிய குறிப்புகள்

தொல்காப்பியம் வேலியின் நோக்கிய விளக்கு நிலையும் என்று கார்த்திகையில் ஏற்றிய விளக்குபற்றிக் கூறுகிறது.

“மைம்மிசையின்றி மலை விளக்குப்

போலலோங்கி

செம்மையினின்றிலங்குந் தீபிகை

தெம்முனையுள்" (சிவலிங்கனார். ஆ. 1996).

என்று தொல்காப்பியம் புறத்திணை 85-ம் பாடல் குறிப்பிடுகிறது.

கார்நாற்பது

"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட

தலைநாள் விளக்கின் தகையுடைய

ஆகிப்

புலமெல்லாம் பூத்தனதோன்றி

சிலமொழித்

தூதொடு வந்த மழை" (வேங்கடசாமி நாட்டார் ந.மு, 1925)

எனக் கார் நாற்பது தீபத்தின் பெருமையைப் பேசுகிறது.

திருமந்திரம்

"விளக்கொளியாகியமின்கொடி

யாளை

விளக்கொளியாக விளங்கிடு நீயே" (திருமூலர், 1954).

என திருமந்திரத்தில் ஒளியின் தன்மைபற்றிக் குறிப்பிடுகிறார் திருமூலர். அருணாசலபுராணத்தில் இறைவன் கூறுவதாக கார்த்திகை தீபத்தின் சிறப்புபலவாறாக விரித்துரைக்கப்பட்டுள்ளது. ஆடி முடி தேடியமாலுக்கும் அயனுக்கும் சிவபெருமான் ஜோதிவடிவில் காட்சி அளித்தார். அந்தநாளே மஹாசிவராத்திரியாகக் கொண்டாடப்படுகிறது. தாங்கள் கண்ட அந்த ஜோதி உருவை அனைத்து மக்களும் காணவேண்டும். என திருமாலும் பிரம்மனும் தேவர்களும் சிவபெருமானிடம் வேண்டினர். அதற்குச் சிவபெருமான்,

## கார்த்திகைக்குக் கார்த்திகை நாள்

ஒரு ஜோதி

"மலைநுனியில் காட்டாநிற்போம்

வாய்த்துவந்தசுடர்காணில் பசிபிணி

இல்லாதுஉலகில் மன்னிவாழ்வார்

பார்த்தவர்க்கும் அருந்தவர்க்கும்

இடையூறு

தவிரும் இது பணிந்தோர் கண்டோர்

கோத்திரத்தில் இருபத்துஓர்

தலைமுறைக்கு

முத்திவரம் கொடுப்போம்" என்றார்

என்று அருளிச் செய்ததாக அருணாசலபுராணம்

(பாடல் 159) கூறுகிறது. (எல்லப்பநாவலர், சைவ.1906)

.கார்த்திகை தீப வெண்பாவும் தீபத்தின் பெருமையை

புத்திதரும் தீபம் நல்ல புத்திரசம்

பத்துமுண்டாம்

சித்திதரும் தீபம் சிவதீபம்-சக்திக்கு

உயிராகும் சோணமலை ஓங்கிவளர்

ஞானப்

பயிராகும் கார்த்திகைத் தீபம்

என்கிறது திருஞானசம்பந்தர் உள்ளிட்டபலர் இயற்றிய கார்த்திகை தீபம் பற்றிய பாடல்கள் பக்தி இலக்கியங்களில் காணப்படுகின்றன.

## அறுமுகனும் தீபத்திருநாளும்

"சக்தி ஆறு குழந்தைகளையும் சேர்த்து ஒரு குழந்தையாக மாற்றுகிறாள். அதனால் அக்குழந்தைக்கு ஆறுமுகன் என்றுபெயர் உண்டாகிறது. சிவன் கார்த்திகைப் பெண்களை வானத்தில் நட்சத்திரங்களாக மாற்றியமைக்கிறார். அதுகார்த்திகை நட்சத்திரக் கூட்டம் என்று அழைக்கப்படுகிறது" (ரமணன்,பா.சு.2014). சுடராகப் பிறந்து ஒருங்கிணைந்த கார்த்திகேயனின் நாள் தான் கார்த்திகை நாள் கார்த்திகை தீபதிருநாள் மூன்று நாள் கோலாகலமாக நடக்கும். ஊரே ஒளியால் மிளிரும் பெண்கள் குழந்தைகள் கும்மி வட்டமாக அடித்து பாடல்களாக பாடுவார்கள்

1.பெரியகார்த்திகை

2.நாட்டுக் கார்த்திகை

3.கொல்லைக் கார்த்திகை

பெரியகார்த்திகை

மலைகளில் தீபம் ஏற்றுவது பெரியகார்த்திகை

திருவண்ணாமலை -பழனி

## நாட்டுக் கார்த்திகை

நீர் நிலைகளில் கோவில்களில் தீபம் ஏற்றுவது நாட்டு கார்த்திகை. இது பொதுமக்கள் அனைவரும் பின்பற்றுவது இந்த நாட்டுகார்த்திகை நாளில் கொங்கர்கள் தலைமுறைதலை முறையாக தங்கள் குலதெய்வ கோவில்களில் விளக்கு ஏற்றுவார்கள்

## கொல்லைக் கார்த்திகை

கழனிகளில் (வயல் வெளிகளில்) குப்பை மேட்டில் விளக்கு ஏற்றுவது கொல்லை கார்த்திகை இது தீபத்தின் மூன்றாம் நாள். இந்த மூன்றாம் நாளில் மக்கள் சொக்கபானை கொளுத்துவார்கள்.

## முடிவுரை

கார்த்திகை தீபவழிபாடு தமிழ்நாட்டில் தொன்று தொட்டு நிலவிவரும் வழிபாடுகளுள் ஒன்று. கார்த்திகை தீபம் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் ,கார்த்திகை நட்சத்திரத்தன்று

**கொண்டாடப்படுகிறது. இந்நாள் முழுநிலவை ஒட்டியே அமைகிறது. தமிழர்கள் வாழும் பகுதிகள் அனைத்திலும் கொண்டாடப்படுகிறது. என்றாலும் தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் மிகச் சிறப்பாக இவ்விழா நடைபெறுகிறது.**

## References

Ellappanavalar, S. (1906) Arunachala Puranam, Kalaikiyana Muthirasasalai, Chennai, India

Ramanan, P.S. (2014) Kirivalam, Suriyan Pathippagam, Chennai, India

Sivalinganar, A. (1996) Tholkapiyam Purathinaiyiyal, International Institute of Tamil Studies, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License